சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 16.08.2023
SC.NO. 137/2023
PW7 : திரு.அசோக் மேத்தா (வயது 34) த/பெ. ஜோதிவேல்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)
( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் முள்ளால் கிராமம் காளியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்கூல் வேன் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன் . அ.சா.1 முதல் அ.சா.6 வரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியும் அவர் எங்கள் ஊர்காரரர் தான். எங்கள் ஊரில் வருடா வருடம் காளியம்மன் கோவில் திருவிழா நடைபெறுவது வழக்கம். எங்கள் ஊர் வெற்றி செல்வி வீட்டிற்கு தஞ்சாவூரை சேர்ந்த கார்த்திக் என்பவர் திருவிழாவிற்காக வந்திருந்தார். திருவிழா எப்போதும் மே மாதம் அல்லது ஜூன் மாதம் நடைபெறும். 15.06.2022 தேதி கார்த்திக் என்பவரை ஆஜர் எதிரி ஜெகன் என்பவர் கத்தியால் குத்திவிட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக நான் 16.06.2022 தேதி சுமார் காலை 11.30, 11 3/4 மணியளவில் நானும் டி கல்விக்குடியை சேர்ந்த விஏஓ சரவணனும் புள்ளம்பாடி பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த போது அங்கு கல்லக்குடி காவல் ஆய்வாளர் ஆஜர் எதிரியை அழைத்து வந்தார்கள் . அப்போது ஆஜர் எதிரி ஆய்வாளரிடம் எவ்வித துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் தான் வைத்திருந்து மடிகணிணி மூலம் தட்டச்சு செய்து பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் , உடனிருந்த டி கல்விக்குடி விஏஓ சரவணனும் கையொப்பம் செய்தோம் . என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி

கையெழுத்து என்னுடையது தான் . அந்த சாட்சி கையெழுத்து அ.த.சா.ஆ.4/ அ.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ஆய்வாளரிடம் 15.06.2022 தேதி இரவு காயம்பட்ட கார்த்திக்கிடம் செல்போன் கேட்டதாகவும் அதற்கு கார்த்திக் தர மறுத்ததாகவும், அதனால் ஆஜர் எதிரியை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், நான் போன் கேட்டு கொடுக்கமால் என் ஊருக்கு எதுக்குடா வந்தாய் என சொல்லி கத்தியை எடுத்து கார்த்திக்கை பல இடங்களில் குத்தியதாகவும் சொன்னார் . சத்தம் கேட்டு உறவினர்கள் வரவே ஓடிவிட்டதாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் . அதன் பின்னர் ஆஜர் எதிரியை காவல் ஆய்வாளர் , என்னையும் டி கல்விக்குடி விஏஓவையும் அழைத்து கொண்டு ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்றோம் அப்போது பகல் 1 மணி இருக்கும். அப்போது ஆஜர் எதிரி தனது வீட்டின் தாழ்வாரத்தில் வைத்திருந்த கத்தியை எடுத்து கல்லக்குடி காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார் . அதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி ஆய்வாளர் என்னிடமும் டி கல்விக்குடி விஏஓ சரவணனிடமும் கையொப்பம் வாங்கி கொண்டார்கள் . என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.5/ அ.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆஜர் செய்த கத்தியை பார்த்தால் நான் அடையாளம் செய்வேன் . என்னிடம் காட்டப்படும் கத்திதான் அந்த கைப்பற்றிய கத்தியாகும். அந்த கத்தி அ.த.சா.பொ.1 / அ.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை அன்றைய தினமே விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

டி கல்விக்குடி விஏஓ சரவணன் தான் எங்கள் ஊர் விஏஓ என்றால் சரிதான். நான் புள்ளம்பாடிக்கு எதற்காக சென்றேன் என்ற விபரத்தை நான் எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் எங்கள் வீட்டிற்கு ஆட்கள் திருவிழாவிற்கு வந்திருந்தார்கள் சாமான் வாங்க சென்றேன் . எதற்காக புள்ளம்பாடி வந்தேன் என்ற விபரத்தை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் . ஜெகன் மீது வழக்கு பதிவு செய்தது எனக்கு என்றைக்கு தெரியும் என்றால் வழக்கு பதிவு செய்த அன்று இரவு தெரியும். அந்த தேதி 15.06.2022 ஆகும். என்னுடைய வாக்குமூலத்தில் நானும் டி கல்விக்குடி விஏஓ சரவணனும் காலை 11.45 மணிக்கு புள்ளம்பாடி பஸ் நிலையம் அருகே நின்று கொண்டிருந்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . அந்த வாக்குமூலத்தில் எதிரி ஜெகனை காலை 11.30 மணிக்கு கைது செய்த போது என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான் . நான் வந்தது 11.45 மணி என்பதால் எதிரியை கைது செய்தது எனக்கு தெரியாது என்றால் நான் சொல்லியது 11.30 மணி முதல் 11.45 மணி வரை என தான் சொன்னேன் . நான் கைது செய்ததை பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல . ஜெகனிடம் புள்ளம்பாடி பஸ் ஸ்டாப்பில் ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை மணிக்கு வாங்கினார்கள் என்றால் 11.45 மணி இருக்கும். எவ்வளவு மணி நேரம் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் 3/4 மணி நேரம் கொடுத்தார் . வாக்குமூலத்தை யாரிடம் கொடுத்தார் என்றால் இன்ஸ்பெக்டர் மேடத்திடம் கொடுத்தார். யாரெல்லாம் உடன் இருந்தார்கள் என்றால் விஏஓ சரவணன் மற்றும் நான் உடனிருந்தேன் . இரண்டு கான்ஸ்டெபில்கள் உடனிருந்தார்கள். லேப்டாப்பில் யார் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றால் இன்ஸ்பெக்டார் தான் டைப் செய்து பதிவு செய்தார் . அருகில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு சென்று பிரிண்ட் எடுத்தார்கள் . அதில் என்ன

எழுதியிருந்தது என்று நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிரிண்ட் எடுப்பதற்கு, வாக்குமூலம் வாங்கிய பிறகு 10 நிமிடம் ஆனது. போலிசார் என்னிடம் வேறு ஏதாவது பேப்பரில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் கத்தி கைப்பற்றியதற்கு கையெழுத்து வாங்கினார்கள். எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் எழுதிய பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் . ஜெராக்ஸ் கடை பெயர் ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகம் இல்லை . சம்பவம் நடந்த அன்று எதிரி ஜெகன் வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டதா கேள்விப்பட்டீர்களா என்றால் அது பற்றி நேரடியாக எனக்கு தெரியாது . எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும் போது ஓடிப்போகும் போது தவறி வயற்காட்டில் விழுந்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டதாக கூறினார். கத்தியை கைப்பற்றும் போது சுமார் எத்தனை மணி இருக்கும் என்றால் பகல் 1, 1– 1/4 மணி நேரம் இருக்கும் . எனது வாக்குமூலத்தில் புள்ளம்பாடி பேருந்து நிலையத்தில் அருகில் நின்று கொண்டிருப்பதாக சொல்லியுள்ளேனே தவிர அது எந்த இடம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும் போதும், மற்றும் கைப்பற்றும் மகஜர் தயார் செய்யும் போது நான் உடன் இல்லை என்றாலும் , போலிசார் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் தான் நான் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல. மறு விசாரணை இல்லை.

/signed/
அசோக்மேத்தா

/signed/
திரு.S.விஜயகுமார், M.A., M.L.,
சார்பு நீதிபதி, இலால்குடி.